| | |
|---|---|
| | **வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம்** |
| | **இரண்டாம் தவணைப்பரீட்சை– 2017** |

| | | |
|---|---|---|
| தரம் - 09 | **சைவநெறி** | நேரம் :- 2.00 மணித்தியாலம் |

பெயர் / சுட்டெண் :- ...............................

## பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

01) பிரணவப் பொருளாக விளங்குபவர்
1. பிள்ளையார் 2. சிவபெருமான் 3. முருகன் 4. வைரவர்

02) மகரசந்திராந்தி என்று குறிப்பிடப்படும் பண்டிகை.
1. தைப்பொங்கல் 2. ஆடிப்பிறப்பு 3. தீபாவளி 4. வருடப்பிறப்பு

03) பராபரக் கணிணியை அருளியவர்.
1. குமரகுருபரர் 2. தாயுமானவர் 3. கபிலதேவர் 4. அருணகிரிநாதர்

04) சிவபெருமான் குருவாக அமர்ந்து ஞானோபதேசம் செய்த வடிவம்
1. நடராஜர் 2. தட்சணாமூர்த்தி 3. சோமஸ்கந்தர் 4. இலிங்கோற்பவர்

05) பிதிர்கள் பூவுலகில் வந்து உறவினர் வீடுகளில் தங்கும் காலம்.
1. மகாளயம் 2. பௌர்ணமி 3. அமாவாசை 4. சிரார்த்தம்

06) தெய்வத்திற்கு பலபெயர் சொல்லி வழிபடும் மரபு காணப்படும் வேதம்.
1. இருக்கு 2. சாமம் 3. அதர்வணம் 4. யசுர்

07) திருத்ததாண்டகம் பாடியவர்
1. திருநாவுக்கரசர் 2. சுந்தரர்
3. திருஞானசம்பந்தர் 4. மாணிக்கவாசகர்

08) "இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பட்டவர்.
1. புனிதவதியார் 2. மங்கையற்கரசியார் 3. சங்கிலியார் 4. இசைஞானியர்

09) சகலகலா வல்லிமாலை அருளியவர்
1. சேக்கிழார் 2. சேந்தனார் 3. அபிராமிப்பட்டர் 4. குமரகுருபரர்

10) வேதங்கள் மனிதரால் ஆக்கப்படாதவை என்பதால் வழங்கும் பெயர்.
1. எழுதாக்கிளவி 2. சுருதி 3. அபௌருஷேயம் 4. ஆம்நாயம்

11) "ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவாய் என்று பாடியவர்.
1. சுந்தரர் 2. மாணிக்கவாசகர் 3. திருநாவுக்கரசர் 4. திருஞானசம்பந்தர்

12) ஐந்தொழில் தத்துவத்தில் காத்தல் குறித்து நிற்பது.
1. கொடியேற்றம் 2. தேர்த்திருவிழா 3. தீர்த்தத்திருவிழா 4. வாகனத்திருவிழா

13) தமிழ் வருடங்களில் தற்போதைய வருடத்தின் பெயர்.
1. பிரபவவருடம் 2. துர்முகிவருடம் 3. ஏவிளம்பிவருடம் 4. விகிர்திவருடம்

14) திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் தலத்தின் இறைவி பெயர்.
1. மாதுமையாள் 2. பண்மொழியம்மை
3. கௌரியம்மை 4. தையல் நாயகி

15) காயத்திரி மந்திரம் சிறப்புப்பெறும் வேதம்.
1. அதர்வம் 2. சாமம் 3. யசுர் 4. இருக்கு

16) பத்தாம் திருமுறையாக அமைந்தது.
1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருப்பல்லாண்டு 4. திருமந்திரம்

17) சக்திக்குரிய விரதமாக அமைந்தது.
1. சிவராத்திரி 2. நவராத்திரி 3. சதுர்த்தி 4. கந்தசஷ்டி

18) ஐம்பூதங்கள் எனப்படுபவை.
1. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் 2. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
3. மெய், வாய், கண், மூக்கு, செவி 4. மனம், புத்தி, சித்தம், அலங்காரம், காயம்

19) பிவருவனவற்றுள் சிவபுராணமாக அமைவது.
1. ஆக்நேயம் 2. பிரமம் 3. நாரதீயம் 4. மார்க்கண்டேயம்

20) சித்திரை புதுவருடத்தில் தோஷம் நீங்குவதற்க செய்யப்படுவது.
1. ஆலய வழிபாடு செய்தல்
2. கைவிசேடம் பெறுதல்.
3. மருத்துநீர் வைத்து நீராடல்.
4. பகிர்ந்துண்ணல்.

[ 20x2=40 புள்ளிகள்]


kalvi.lk

## பகுதி – II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுக.
    1. "ஓசையொலியெலாம்........."
    2. "நையாத மனத்தினனை.........."
    3. "காதலாகி.........."
    4. "தனம் தரும்........" [2x6=12 புள்ளிகள் ]

2. "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்"
    1. வேதங்களுக்குரிய மறுபெயர்கள் நான்கு எழுதுக.
    2. ஆகமம் என்பதன் பொருள் யாது?
    3. புராணங்களின் குறிப்பிடப்பட்டுள்ள பஞ்சலக்கணங்கள் எவை?
    4. இதிகாச நூல்கள் எவை? [4x3=12 புள்ளிகள் ]

3. "மனித வாழ்வை மேம்படுத்த விழுமியங்கள் உதவுகின்றன."
    1. விழுமியப் பண்புகள் நான்கு எழுதுக.
    2. தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் யாவை?
    3. உளத்தூய்மையுடன் தொடர்புடைய திருக்குறளை எழுதுக.
    4. சகிப்புத்தன்மையை கடைபிடிப்பதன் நன்மைகள் எவை?

    [4x3=12 புள்ளிகள் ]

4. "விரதங்களும் பண்டிகைகளும் மனித வாழ்வை மேம்படுத்துவன".
    1. விரதம் என்பதற்கு நாவலர் கூறும் விளக்கம் யாது?
    2. சிவராத்திரி விரதத்திற்குரிய நியதிகள் எவை?
    3. தைப்பொங்கல் பண்டிகை உணர்த்தும் படிப்பினை யாது?
    4. பண்டிகைகள் மூலம் வளர்த்துக் கொள்ளக்கூடிய நல்ல பண்புகள் எவை?

    [4x3=12புள்ளிகள் ]

5. "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண உமையே".
    1. காரைக்காலம்மையாரின் இளமைப்பெயர் யாது? பிறந்த இடம் யாது?
    2. காரைக்காலம்மையார் பாடியருளிய நூல்கள் இரண்டு தருக. எத்தனையாம் திருமுறையில் அடங்கியுள்ளது.
    3. காரைக்காலம்மையார் கைலாயத்திற்கு எவ்வாறு சென்றார்?
    4. அம்மையார் இறைவனிடம் கேட்ட வரம் யாது?

    [4x3=12 புள்ளிகள் ]

6. "திருமுறைகள் தமிழ்மறை எனப்போற்றப்படுகின்றன."
    1. திருமுறைகளை தொகுத்தவர் யார்?
    2. தேவாரங்களில் காணப்படும் சிறப்புகள் மூன்று எழுதுக?
    3. பஞ்சபுராணம் ஓதும் ஒழுங்கு முறையை எழுதுக.
    4. திருமுறைகள் பாடுவதன் பயன்கள் 3 எழுதுக.

    [4x3=12 புள்ளிகள் ]

7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1. தைப்பொங்கல்
    2. சமாதானம்
    3. நவராத்திரி
    4. ஆலய வழிபாடு
    5. பெரிய புராணம்

    [2x6=12 புள்ளிகள் ]

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page